## 9

### திறவுகோல் வசனம்: யோவான் 4:20-24

# கடைப்பிடித்தலில் உள்ள வேறுபாடுகள் மீதான கேள்விகள்

சபைகள் இயேசுவின் அறிவுறுத்துதல்களை மாற்றாத வரையிலும், அவைகள் கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடித்தலில் மாறுபாடு கொண்டிருக்க உரிமை உடையவைகளாக உள்ளன. புதிய உடன்படிக்கை போதிக்கும் விஷயங்களை மாற்றுகிறவர்கள், அத்துடன் ஒன்றைக் கூட்டுகிறவர்கள் அல்லது குறைக்கிறவர்கள், இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் கைக்கொள்ளுவதில் தவறுவதன் மூலம் (மத்தேயு 28:20) கீழ்ப்படியாமல் போகின்றனர்.

மீளக்கட்டுவிக்கும் இயக்கம் தொடங்கியபோது, பெரும்பான்மையான சபைக்குழுமங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பதில் திராட்ச மதுவை (ஒயின்) பயன்படுத்தின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவுக்காலத்தில், அமெரிக்க நாடு முழுவதிலும் Temperance Movement என்ற இயக்கம் தனது செல்வாக்கை மேலோங்கச் செய்த காரணத்தினால் இது மாற்றம் அடைந்தது. அன்றுதொடங்கி கிறிஸ்துவின் சபைகளினுடைய பெரும்பான்மையான சபைக்குழுமங்கள் திராட்ச இரசத்தையே பயன்படுத்தி வருகின்றன.

மேலும், மீளக்கட்டுவித்தலின் அந்தத் தொடக்க காலத்தில் கிறிஸ்துவின் சபைகளில் பெரும்பான்மையானவை ஒரே பாத்திரத்தில் பானம்பண்ணுதல் என்ற கொள்கையைக் கொண்டிருந்தன. பெரிய சபைக்குழுமங்கள், ஒரு பாத்திரத்தில் சபையாருக்குப் பரிமாறவும் அது தீர்ந்து போகையில் அதை நிரப்புவதற்கு இன்னொரு பாத்திரமுமாக இரு பாத்திரங்களைப் பயன்படுத்தின. தாமஸ் மற்றும் அலெக்சாண்டர் கேம்ப்பெல் ஆகியோர் பிரசங்கித்த, விர்ஜீனியா (இப்போது மேற்கு விர்ஜீனியா) மாகாணத்திலுள்ள பெத்தானி என்ற இடத்தில் உள்ள கிறிஸ்துவின் சபையானது திராட்ச இரசத்தைப் பரிமாறுவதில் இரண்டு (வெள்ளீயமும் காரீயமும் கலந்து செய்யப்பட்ட) பாத்திரங்களைப் பயன்படுத்திற்று. அவற்றில் ஒரு பாத்திரம் அரங்கத்தில் இருந்த ஆண்கள் பகுதிக்கும் இன்னொன்று பெண்கள் பகுதிக்கும் பயன்படுத்தப்பட்டது. புகையிலையை மென்ற ஆண்கள் பானம் செய்த பின்பு அதில் பானம் செய்வதற்கு பெண்கள் விரும்பவில்லை.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இன்னொரு (கேடான) வளர்ச்சியான, காசநோய் வேகமாய்ப் பரவுதல் காரணமாக பல பாத்திரங்கள் பயன்படுத்தப்படுதல் தொடங்கிற்று, இது சபைகள் ஒரே பாத்திரத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகப் பல சிறு பாத்திரங்களை ஒரு அகலத்தட்டில் வைத்துப் பரிமாறுதலைத் தூண்டிற்று."[1] காசநோய் தொற்றும் அச்சம் இருந்தபோதிலும், சில சபைக்குழுமங்கள் ஒரே ஒரு பாத்திரத்தைப்

பயன்படுத்துதல் என்ற பழக்கத்தைக் தொடர்ந்தன, இவைகள் தாங்கள் சுகவீனம் அடைவதில் இருந்து தங்களைத் தேவன் பாதுகாப்பார் என்று நம்பின.

## ஒரே ஒரு பாத்திரத்தைக் கொண்டிருத்தல் பற்றிய விஷயம் என்ன?

இயேசு, “இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய ...” என்று உரைத்தார் (லூக்கா 22:20). கிரேக்க இலக்கணத்தின்படி, “பாத்திரம்” தான் “சிந்தப்பட்டதே” தவிர அதில் உள்ள பொருட்கள் அல்ல, அது இயேசுவின் இரத்தத்தைக் குறித்தது. “இலக்கணரீதியாக (“சிந்தப்பட்டது” என்ற) இந்தச் சொற்றொடர் (“பாத்திரம்” என்பதற்கான) *potērion* என்ற சொற்றொடருடன் இணைந்து செல்கிறது, ஆனால் சொற்பொருள் சார்ந்த வகையில் இது இரத்தத்தைக் குறிக்கிறது.”[2] இவ்வசனப் பகுதியில் இயேசு, தமது இரத்தம், அப்போஸ்தலர்கள் பானம் பண்ணின பாத்திரத்தில் அவர்கள் அருந்துவதற்காக அல்ல, ஆனால் சிலுவையில் சிந்தப்படும் என்றே அர்த்தப்படுத்தினார்.

கொரிந்தியர்களுக்கு எழுதிய பவுல், ‘‘இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் ...” என்று கூறியபோது பாத்திரத்தை அல்ல ஆனால் அதில் உள்ள பொருளையே குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 10:21; 11:25-28). ஒருவர் பாத்திரத்தைப் பானம்பண்ண இயலாது. “பாத்திரம்” என்பது உருவக நடைப் பேச்சாக உள்ளது. நாம் “முழுப்பாத்திரத்தையும் சாப்பிட்டார்” என்று கூறுகிறபோது, யாரோ ஒருவர் பாத்திரத்தை அல்ல, ஆனால் பாத்திரத்தில் இருந்த எல்லாவற்றையும் உண்டார் என்றுதான் அர்த்தப்படுத்துகிறோம். “குழந்தை தனது பாட்டிலைக் குடித்தது” என்பது இன்னொரு உதாரணமாக உள்ளது. இது குழந்தை உண்மையாக பாட்டிலைக் குடித்தது என்று அல்ல, ஆனால் பாட்டிலில் உள்ள பாலைக்குடித்தது என்றே அர்த்தப்படுகிறது.

இயேசு “இந்தப் பாத்திரம்” என்று குறிப்பிட்டபோது, அவர் தமது கையில் வைத்திருந்த பாத்திரத்தில் இருந்ததைப் பற்றிப் பேசினார் (லூக்கா 22:20; 1 கொரிந்தியர் 11:25). அவர் பாத்திரத்தில் உள்ளதைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக பாத்திரத்தைப் பற்றிப் பேசியிருந்தார் என்றால், அந்தப் பாத்திரத்தை மாத்திரமே இன்றளவும் நாம் பயன்படுத்த வேண்டியதாக இருந்திருக்கும். உலகத்தில் உள்ள ஒவ்வொரு சபைக்குழுமமும், இயேசு கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கப் பயன்படுத்திய அதே பாத்திரத்தை மாத்திரமே பயன்படுத்த வேண்டியதாக இருந்திருக்கும்.

இங்கு, ‘‘கர்த்தருடைய பாத்திரம்’’ என்பது 1 கொரிந்தியர் 10:21ல் உள்ள ‘‘பேய்களின் பாத்திரம்’’ என்பதைக் காட்டிலும் அதிகமானதாக இருப்பதில்லை. இந்தச் சொற்றொடர், குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தில் இருந்து பானம்பண்ணுவதை அல்ல ஆனால் பாத்திரத்தில் உள்ளவற்றைப் பானம் பண்ணுவதையே குறிப்பதாக உள்ளது. புறதெய்வ வணக்கத்தவர்கள் பானம் பண்ணியது குறிப்பிட்ட ஒரு பாத்திரமாக இருக்கவில்லை, ஆனால் அது பேய்களின் ஆராதனையில் பயன்படுத்தப்பட்ட பானமாக இருந்தது. அதுபோன்றே, கர்த்தருடைய பாத்திரம் என்பதும் எல்லாக் கிறிஸ்தவர்களாலும் உலகம் முழுவதிலும் பயன்படுத்தப்படுகிறதான பாத்திரத்தில் உள்ளவற்றைக்

குறிக்கிறதே அன்றி பாத்திரத்தைக் குறிப்பதில்லை.

"பாத்திரம்" என்று கூறியதன் மூலம் இயேசு, பாத்திரத்தை அல்ல ஆனால் அதில் இருந்த திராட்ச இரசத்தை அர்த்தப்படுத்தினார் என்றால், அதுவே அப்போஸ்தலர்கள் பானம் பண்ண வேண்டியதாக இருந்தது. நாம் திராட்ச இரசத்தைப் பானம் பண்ணும்போது, சுவிசேஷப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உடன்படிக்கையின் இரத்தமான இயேசுவின் இரத்தத்தை நினைவுகூருகிறோம் (மத்தேயு 26:28; மாற்கு 14:24; லூக்கா 22:20).

இஸ்ரவேல் மக்களுடன் ஏற்படுத்தப்பட்ட முதலாம் உடன்படிக்கையானது மிருகங்களின் இரத்தத்தைக் கொண்டு அர்ப்பணிக்கப் பட்டது (எபிரெயர் 9:18). திராட்ச இரசத்தினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிற இயேவின் இரத்தம் புதிய உடன்படிக்கைக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

கர்த்தருடைய "பாத்திரம்," பாத்திரத்தில் உள்ள திராட்ச இரசம் என்பது எல்லாக் காலத்திலும் உள்ள எல்லா மக்களுக்குமானதாக உள்ளது. யாக்கோபின் கிணற்றில் இருந்து (யோவான் 4:12) தண்ணீரைக் குடித்தவர்கள், அந்தக் கிணற்றில் இருந்து தண்ணீர் மொள்வதற்குப் பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு பாத்திரங்களைப் பயன்படுத்தியது போன்றே, (யோவான் 4:12) இயேசுவின் ஒரே பாத்திரத்தில் இருந்து பானம்பண்ணுவதற்குப் பல பாத்திரங்கள் தேவையாக உள்ளன, அது ஒவ்வொரு தனிநபருக்கும் ஒரு பாத்திரமாகவோ அல்லது ஒரு சபைக்குழுமத்திற்கு ஒரு பாத்திரமாகவோ இருக்கலாம்.

ஒரே ஒரு பாத்திரத்தில் இருந்தே பானம்பண்ண வேண்டும் என்று ஒரு சபைக்குழுமம் விரும்பித் தேர்ந்துகொள்கிறது என்றால் அதில் தீங்கு ஒன்றும் இல்லை, ஆனால் ஒரே பாத்திரத்தையே பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துதலும் இந்த விஷயத்தில் சட்டங்களைத் திணிக்கும்படி பிரிவினைக்குக் காரணமாகுதலும் கிறிஸ்துவின் உபதேசத்தில் காணப்படுவதில்லை. புதிய ஏற்பாடு, "எல்லாரும் ஒரே பாத்திரத்தில் பானம்பண்ண வேண்டும்" என்று உரைத்திருந்தது என்றால், ஒரே ஒரு பாத்திரம்தான் பயன்படுத்தப்பட வேண்டும். பாத்திரங்களின் எண்ணிக்கை பற்றி விதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்பதால், இந்த விஷயம் ஒவ்வொரு சபைக்குழுமத்தின் தனிப்பட்ட விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது.

## ஒரே அப்பத்தைக் கொண்டிருத்தல் பற்றிய விஷயம் என்ன?

இயேசு "ஒரே சரீரத்தை" மற்றும் ஒரே "ஒரு" சரீரத்தையே கொண்டுள்ளார், இது அவரது சபைக் குழுமங்களின் உள்ள எல்லாரையும் உள்ளடக்குகிறது. ஆகவே "ஒரே சரீரம்" என்பது எந்த ஒரு குறிப்பிட்ட சபைக்குழுமத்திற்கும் அல்ல, ஆனால் அவரது சபைக்குழுமங்கள் யாவற்றிற்கும் தொகுப்பு முறையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. 1 கொரிந்தியர் 10:16, 17ல் பவுல், "ஒரே அப்பம்" என்பது ஒரே சரீரமாகிய சபையினால் பகிர்ந்துகொள்ளப்படுகிற ஒரே ஒரு அப்பம் என்ற நேர்ப்பொருளில் கூறவில்லை. அதற்குப்பதிலாக, ஒரே அப்பம் என்பது உலகெங்கும் சிதறியுள்ள சபைக்குழுமங்கள் என்ற அவரது ஒரே சரீரத்தால் உண்ணப்பட்ட பல அப்பங்களாக உள்ளது. R. C. H. லென்ஸ்க்கீ அவர்கள் இந்தக் கருத்துடன் ஒத்துப்போகும் வகையில், "அவர் கிறிஸ்தவ

உலகத்தில் எல்லா ஐக்கிய விருந்து ஆசரிப்புகளிலும் பயன்படுத்தப்பட்ட எல்லா அப்பத்தையும் பற்றிப் பேசுகிறார். அதை அவர் *'eis artos'* ['ஒரே அப்பம்'] என்று அழைக்கிறார்"[3] என்று விளக்கம் அளித்துள்ளார்.

தேவன் தெரிவுசெய்தல் எதையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என்பதால், சபைக்குழுமங்கள் ஒன்று அல்லது அதற்கு அதிகமான அப்பங்கள் அல்லது பாத்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதைக் தெரிவுசெய்துகொள்ள முடியும். அப்பமும், திராட்ச இரசமுமே தேவைப்படுபவைகளாக உள்ளன, ஆனால் ஒரே அப்பம் மற்றும் ஒரே பாத்திரம் என்பவை அவசியமல்ல. சாலொமோன் மண்டபத்தில் கூடிவந்திருந்த (நடபடிகள் 5:12) எருசலேம் நகரில் இருந்த சபையின் (நடபடிகள் 2:41; 4:4) பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஒரே பாத்திரத்தில் பரிமாறுதலுக்கு மிகப்பெரிய அப்பமும் இராட்சதப் பாத்திரமும் தேவைப்பட்டிருக்கும்.

கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்டபோது, ஒவ்வொரு அப்போஸ்தலரும் தத்தமது சொந்தப் பாத்திரத்திலேயே பானம்பண்ணியிருப்பார் என்பது மிகவும் ஏற்புடையதாக உள்ளது. இது பஸ்கா பண்டிகையின்போது தனித்தனி பாத்திரங்களைப் பயன்படுத்துதல் என்ற நடைமுறையையும் சந்தர்ப்பப்பொருளையும் நியாயப்படுத்துவதாகக் காணப்படுகிறது.

## ஐக்கிய விருந்தின்போது பாடுதல் பற்றிய விஷயம் என்ன?

ஐக்கியவிருந்தின்போது பாடுதல் என்பது சில சபைக்குழுமங்களின் வழக்கமாக உள்ளது. இந்த பழக்கத்தைப் பற்றி இரு உற்றுநோக்குதல்களை நாம் ஏற்படுத்துவோமாக.

முதலாவது பவுல், ஒரே வேளையில் ஒன்றுக்குமேற்பட்ட நபர்கள் பேசுவதை அனுமதிக்கவில்லை (1 கொரிந்தியர் 14:27-30). அவர்கள் "ஒவ்வொருவராக" பேச வேண்டும் என்று அவர் எழுதினார். கலந்துரையாடலை முடிக்கும் வகையில் அவர், "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 14:40). பேசுபவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பேசுதல் மாத்திரமல்ல, ஆனால் "சகலமும்" கிரமமான நடையில் செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. "கிரமமாக" என்பது *"மாறாத வரிசை"* ஒன்றில் ஒன்றிற்குப் பின் மற்றொன்று என்ற வகையில் "வரிசையாக" செய்யப்பட்ட, மற்றும் எந்த இருநடவடிக்கைகளும் ஒரே நேரத்தில் செய்யப்படாததாக உள்ள நடவடிக்கைகள் என்று அர்த்தப்படுகிற *"taxis"* என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது.[4] நமது ஆராதனை முறையானதாக இருக்க வேண்டும். ஒரு நடவடிக்கையானது இன்னொரு நடவடிக்கைக்கு இடையூறாக இருக்கலாகாது என்பதே வரிசையான செயல்முறைகளின் நோக்கமாக இருந்தது. ஒருவர் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும்போது இன்னொருவர் உரத்த குரலில் ஜெபித்துக் கொண்டிருந்தால், உறுப்பினர்கள் ஜெபத்தின் மீதோ அல்லது பிரசங்கத்தின் மீதோ கவனம் குவிப்பதில் சிரமம் கொண்டிருப்பார்கள்.

இரண்டாவது, ஐக்கிய விருந்தின்போது ஒரு பாடல் பாடுதல் என்பது தனிப்பட்ட தியானத்திற்கு இடையூறாக இருக்கிறது. ஆராதிப்பவர், ஒரே வேளையில் பாடலின் வார்த்தைகளின் மீதும் இயேசுவுடனான தமது

தனிப்பட்ட உறவின்மீதும் கவனம் செலுத்த இயலாதவராக இருக்கலாம். ஒரே வேளையில் இரு செயல்களையும் செய்வதற்குப் பதிலாக, இராப்போஜனத்திற்கு முன்னதாகவோ அல்லது அதற்குப் பின்னதாகவோ பாடல்கள் பாடலாம்.

அப்பம் மற்றும் திராட்ச இரசம் ஆகியவை பரிமாறப்படும்போது பாடல்கள் பாடுதலுக்கோ அல்லது இவ்விரு நினைவுச் சின்னங்களும் பரிமாறப்படுவதற்கு முன்னர் இவற்றிற்காக ஒரே ஜெபத்தை ஏறெடுத்தலுக்கோ வேதாகமரீதியான முன்னுதாரணச் செயலோ அல்லது அறிவுறுத்தலோ இல்லை. இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுதலும் - அப்பம் பரிமாறப்படுவதற்கு முன்னர் ஒன்றும் திராட்ச இரசம் பரிமாறப்படுவதற்கு முன்னர் ஒன்றும் ஆக இரு ஜெபங்களைக் கொண்டிருத்தலும், நாம் உண்டு பானம்பண்ணுகையில் அவரது மரணத்தைத் தியானித்தலுமே பாதுகாப்பான ஒட்டமாக இருக்கிறது.

## "அன்பின் விருந்து" ஒன்றைக் கொண்டிருத்தல் பற்றிய விஷயம் என்ன?

"அன்பின் விருந்து" என்பதற்கு யூதா 12 மாத்திரமே வேதவசனங்களில் காணப்படும் ஒரே குறிப்பாக உள்ளது. இது எவ்வாறு, எப்போது அல்லது எங்கு கடைப்பிடிக்கப்பட்டது என்பதற்கான தகவல் எதுவும் தரப்பட்டு இருப்பதில்லை. முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில், வேலைக்குச் செல்வதற்கு முன்னர் கடைப்பிடித்தனர், பின்பு அவர்கள் மாலைவேளையில் ஒரு உணவை ஒன்றுகூடி உண்பதற்காகக் கூடிவந்தனர் என்று இரண்டாம் நூற்றாண்டு எழுத்தாளர்கள் உரைத்தனர்.

> நாளின் பிந்திய பகுதியில் ஒன்று கூடியது ஒரு இரவு உணவிற்காகவே என்று யூகிக்கப்படுகிறது. இந்த உணவு "அன்பின் விருந்தாக" (அல்லது யூதா 12ல் உள்ள agape என்பதாக) இருந்திருக்க வாய்ப்பு உள்ளது, இது நாளின் மாலைவேளையில் பிரதான உணவு உண்ணப்படும் வேளையில் கடைப்பிடிக்கப் பட்டது.[5]
>
> இந்த உணவின்போது கர்த்தருடைய பந்திக்கு இடம் இருக்கவில்லை, மற்றும் தெர்த்துல்லியனின் மற்ற சான்றுகள், கர்த்தருடைய பந்தி என்பது இவ்வேளையில் உண்ணப்பட்ட உணவின் ஒருபகுதியாக இருந்தது என்பதற்கு எதிரானதாக உள்ளது.[6]

சபை வரலாற்றின் மிகத் தொடக்கப் பகுதியில், கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைச் சாத்தியமான வகையில் ஒரு பொதுவான உணவுடன் கடைப்பிடித்தனர் என்று எவரெட் ஃபெர்கூஸன் அவர்கள் எழுதினார். "சபை உபதேசத்தில் காணப்படுகிற தியாக உணவு என்பது சமூக விருந்தின் சந்தர்ப்பப் பொருளில் அமைவு பெற்றதாக உள்ளது. இது சபையின் தொடக்க நாட்களில் வழக்கமான அமைவில் இருந்திருக்கலாம்."[7]

பிலிப் ஸ்காஃப் அவர்களும் இதே கருத்தை முன்வைத்தார்:

> முதலில் ஐக்கிய விருந்து அன்பின் விருந்துடன் இணைந்திருந்தது, அப்போது இது இயேசு தமது சீஷர்களுடன் உண்ட கடைசி இராப்போஜனத்தின்

> நினைவைக் கொண்டாடும் வகையில் மாலை வேளையில் நடைபெற்றது. ஆனால் இரண்டாம் நூற்றாண்டின் மிகத்தொடக்கப் பகுதியில், இவ்விரு செயல்களும் தனித்தனியே பிரிக்கப்பட்டன, மற்றும் ஐக்கிய விருந்து காலைவேளையிலும் அன்பின் விருந்து மாலைவேளையிலும் இடம்பெற்றன.[8]

அப்போஸ்தலர்களோ அல்லது ஏவுதல் பெற்ற வேறு எந்த மனிதருமோ, கர்த்தருடைய பந்தியையும் அன்பின் விருந்தையும் ஒரே வேளையில் ஒரே காட்சியமைவில் கடைப்பிடிக்க அனுமதித்ததாக, ஃபெர்கூஸன் அவர்களோ அல்லது ஸ்காஃப் அவர்களோ பதிவு ஆதாரம் எதையும் அளிக்கவில்லை. கர்த்தருடைய பந்திக்கும் ஒரு உணவிற்கும் இடையில் தெளிவான வித்தியாசம் இருக்க வேண்டும் என்று பவுல் போதித்தார் (1 கொரிந்தியர் 11:20-26, 33, 34), இது, கர்த்தருடைய பந்தியுடன் ஒரு உணவை உண்ணுதல் என்பது தெய்வீகத் தொடக்கத்தைக் கொண்டதல்ல ஆனால் மனிதரின் கருத்தாக இருந்தது என்று அர்த்தப்படுத்த வேண்டும்.

கொரிந்தியருக்குப் பவுலின் அறிவுறுத்துதல், கர்த்தருடைய பந்தியானது பொதுவான உணவுகளில் இருந்து முற்றிலும் தனிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று தெளிவாகக் காண்பிக்கிறது. கிறிஸ்தவர்கள் இராப்போஜனத்துடன் அல்ல ஆனால் தங்கள் வீடுகளிலேயே தங்கள் உணவுகளை உண்ண வேண்டும் என்று அவர் எழுதினார். "புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டைபண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா?" (1 கொரிந்தியர் 11:22அ); "நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன்" (1 கொரிந்தியர் 11:34அ).

ட்ரேஜன் என்ற அரசருக்கு இளைய பிளீனி எழுதிய கடிதம், கிறிஸ்தவர்கள் தங்கள் அதிகாலை ஆராதனையைக் கொண்டிருந்தனர், பின்பு அவர்கள் ஒரு பொதுவான உணவுக்காக மாலையில் கூடினர் என்று உரைத்தது. "... நியமிக்கப்பட்ட நாளில் (ஞாயிற்றுக்கிழமைகளில்) கிறிஸ்தவர்கள் சூரிய உதய வேளையில் ஒன்று கூடினர் ... அதன்பின்பு (மாலை வேளையில்) அவர்கள் சாதாரண மற்றும் கபடற்ற உணவை உண்ண மீண்டும் ஒன்று கூடினர்."[9]

முதல் நூற்றாண்டில், கர்த்தருடைய இராப்போஜனமும் அன்பின் விருந்தும் ஒரே நாளில் கடைப்பிடிக்கப்பட வேண்டியதாக இருந்தது என்றால், அவர்கள் அவற்றை அந்த நாளின் ஒரே வேளையில் உண்ணாதிருக்க வேண்டி இருந்தது. கர்த்தருடைய இராப்போஜனத்துடன் அன்பின் விருந்தைக் கொண்டிருக்கும்படி கிறிஸ்தவர்களுக்கு அறிவுறுத்துதல் எதுவும் தரப்படவில்லை. பொதுவான உணவையோ அல்லது ஒரு அன்பின் விருந்தையோ அத்துடன் (கர்த்தரின் இராப்போஜனத்துடன்) இணைத்தல் ஒரு தவறாக உள்ளது.

கர்த்தரின் இராப்போஜனம் பஸ்கா உணவைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், இத்துடன் ஒரு ஐக்கிய விருந்து பரிமாறப்பட வேண்டும் என்று இயேசு நோக்கம் கொண்டிருந்ததாக நிரூபிப்பதில்லை. பஸ்கா என்பது ஒரு நினைவுகூரும் விழாவாக இருந்ததே தவிர அது உடன்படிக்கை உணவாக இருக்கவில்லை.

I. ஹோவர்டு மார்ஷல் அவர்கள், யூதர்களின் *kiddush* அல்லது ஆசீர்வாதத்தின்

உணவு பற்றிப் பின்வருமாறு சுட்டிக்காண்பித்தார்:

> [*Kiddush* என்ற] இவ்வகையான உணவு கடைசி இராப்போஜனத்திற்கு ஒரு முன்மாதிரியை அளித்தது என்ற ஆலோசனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், யூதர்களின் *haburoth* என்பது யூதர்களின் சாதாரண உணவுகளில் இருந்து எவ்வகையிலாவது மாறுபட்ட உணவுகளைக் கொண்டிருந்தது என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று பல்வேறு கல்வியாளர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது, எனவே கர்த்தருடைய இராப்போஜனத்தின் பண்பியல் அமைப்புகளின் தொடக்கம் பற்றிய இந்த விளக்கம் கலந்துரையாடலில் இருந்து நீக்கப்படவேண்டும்.
>
> ஆனால் இயேசுவின் இராப்போஜனம் ஒரு *kiddush* (ஆசீர்வாத) உணவாக இருந்தது என்ற கோட்பாடு சாத்தியமற்றதாக உள்ளது, ஏனென்றால் ஓய்வுநாள் அல்லது ஒரு பண்டிகை நாளுக்குச் சற்று முன்னதாக, யூதர்களின் முறையான உணவுகளைத் தவிர *kiddush* உணவு போன்ற விஷயம் எதுவும் இருந்ததில்லை, மற்றும் ஓய்வுநாள் *kiddush* உணவு நமது காலக்கணக்கீட்டின்படி வெள்ளிக்கிழமை மாலையில் நடைபெற்றது. அதேவேளையில், இயேசு தமது கடைசி இராப்போஜனத்தை வியாழக்கிழமை மாலைவேளையில் வைத்திருந்தார் என்பதாலும் இது தெளிவாகிறது. வழக்கமான பண்டிகை இராப்போஜனத்திற்கு முன்னர் விசேஷ பஸ்கா *kiddush* உணவு மாலை வேளையில் இருந்தது என்பதும் ஒரு மாயத் தோற்றமாகவே உள்ளது.[10]

எருசலேமில் இருந்த சபை ஒருவேளை, சபைக்குழுமம் என்ற வகையில் சாலொமோனின் மண்டபத்தில் கூடியிருக்கலாம் (2:46அ; 5:12ஆ). அவர்கள் "அப்பம் பிட்குதலிலும்" மற்றும் "வீடுகள்தோறும் அப்பம்பிட்குதலிலும்" உறுதி யாய்த் தரித்திருந்தனர் (நடபடிகள் 2:42, 46ஆ). "அப்பம் பிட்குதல் என்ற வார்த்தைகள், உபதேசம், ஐக்கியம் மற்றும் ஆராதனை ஊழியங்களில் ஜெபங்கள் என்ற வரிசையில் தோற்றம் தருகின்றன. ஆகவே நாம், இந்தச் சொற்றொடரை பரிசுத்த ஐக்கிய விருந்தை ஆசரித்தலுக்குத் தொடக்ககால விவரிப்பாகப் புரிந்துகொள்கிறோம்."[11]

சபைக்குழுமத்தில் இருந்தவர்கள் தங்கள் பொதுவான உணவுகளைத் தங்கள் இல்லங்களில் உண்டனர், அதைக் கர்த்தருடைய இராப்போஜனத்துடன் உண்ணவில்லை. லூக்கா கிரேக்க மொழியில் சுட்டிக்காண்பிக்கிறபடி, "எருசலேமில் விசுவாசிகள் இந்த உணவுகளை 'அநுதினமும்' மகிழ்வுடன் அனுபவித்தனர் (வசனம் 46அ). அதுபோலவே நாம், சாதாரண உணவை கர்த்தருடைய இராப்போஜன ஆசரிப்பில் இருந்து வித்தியாசப்படுத்த வேண்டும்."[12] கர்த்தருடைய சரீரத்தின் முதல் சபைக்குழுமமான எருசலேம் சபையானது, அன்பின் விருந்து அல்லது பொதுவான உணவு என்பதைக் கர்த்தருடைய இராப்போஜனத்துடன் இணைக்கவில்லை என்பதற்கான ஆதாரம் பலமானதாக உள்ளது.

## கர்த்தருடைய இராப்போஜனத்துடன் தொடர்புடைய வகையில் பாதங்களைக் கழுவுதல் பற்றிய விஷயம் என்ன?

மக்களில் சிலர் பாதங்களைக் கழுவுதலைக் கர்த்தருடைய இராப்போஜனத்துடன் இணைக்கின்றனர். பாதங்களைக் கழுவுதல் என்பது மத சடங்காச்சாரமாக இருக்கவில்லை, ஆனால் அது அழுக்கான பாதங்களைச் சுத்தப்படுத்துதல் என்ற நோக்கத்திற்காகச் செய்யப்பட்ட தாழ்மையான ஊழியத்தின் வெளிப்பாடாக இருந்தது. சபையின் ஆதரவைப் பெறத் தகுதியான உண்மையான விதவை என்பவர் தாம் நிகழ்த்திய மற்ற ஊழியங்களுடன் (பரிசுத்தவான்களின்) பாதங்களைக் கழுவியவராகவும் இருந்தார் (1 தீமோத்தேயு 5:10). இது தாழ்மையான ஊழியம் மற்றும் உபசரிப்பு ஆகியவற்றின் செயலாக இருந்தது, இது ஆராதனையின் செயலாக இருக்கவில்லை.

பாதங்கள் கழுதல் என்பது ஆராதனை நடவடிக்கையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றால், யார், எவ்வாறு மற்றும் எப்போது இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைப் பற்றிய அறிவுறுத்துதல்களைத் தருவதற்குப் புதிய ஏற்பாடு தவறுகிறது. இந்தத் தவறுதல் என்பது, இது ஆராதனை நடைமுறை என்பதல்ல ஆனால் அது ஒரு தாழ்மையின் ஊழியத்திற்கு உதாரணமாக உள்ளது என்பதையே இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று அர்த்தப்பட்டாக வேண்டும்.

இயேசு, "நான் உங்களுக்குச் *செய்ததையே* நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" என்று கூறவில்லை, ஆனால் அவர் "நான் உங்களுக்குச் செய்ததுபோல (*kathos*) என்றுதான் கூறினார்" (யோவான் 13:15). அவர் தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவியதன் மூலம் அவர்களுக்குத் தாழ்மையாக ஊழியம் செய்திருந்தது போன்று அவரது சீஷர்களும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று போதித்தார். அப்படிப்பட்ட ஊழியம் பாதம் கழுவுதலை உள்ளடக்கி இருக்கக் கூடும் ஆனால் அத்துடன் அதை மட்டுப்படுத்தப்படுவதில்லை.

## தொகுப்புரை

இயேசுவைப் பிரியப்படுத்த விரும்புகிற யாவரும் அவரது வசனத்தைக் கவனமாகப் படித்து அதன்படி ஜாக்கிரதையாக வாழவேண்டும். இது கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடித்தல் உட்பட, கிறிஸ்தவ வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திற்கும் நடைமுறைப்படுகிறது. கிறிஸ்தவ யுகத்தில் உள்ள ஒவ்வொருவரும் கருத்துகள், பாரம்பரியங்கள் மற்றும் மனிதருடைய உபதேசங்களினால் அல்ல ஆனால் அவரது வசனத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவான் 12:48).

---

குறிப்புகள்

[1]Paul M. Blowers and Byron C. Lambert, *The Encyclopedia of the Stone-Campbell Movement,* ed. Douglas A. Foster, Paul M. Blowers, Anthony L. Dunnavant, and D. Newell Williams (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2004), 491. [2]J. Reiling and J. L. Swel-

lengrebel, *A Translator's Handbook on the Gospel of Luke* (New York: United Bible Societies, 1971), 688. [3]R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's First and Second Epistle to the Corinthians* (Columbus, Ohio: Wartburg Press, 1946), 412. [4]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 989. [5]Everett Ferguson, *Early Christians Speak* (Abilene, Tex.: Biblical Research Press, 1981), 84; Pliny *Letters* 10.96. [6]Ferguson, 85. [7]Ibid., 99. [8]Philip Schaff, *History of the Christian Church*, vol. 1 (New York: Charles Scribner and Co., 1869), 395. [9]Ibid., 382. [10]I. Howard Marshall, *Last Supper and Lord's Supper* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1980), 20.

[11]Simon J. Kistemaker, *New Testament Commentary,* Exposition of the Acts of the Apostles, (Grand Rapids, Mich.: Baker Book House, 1990), 111. [12]Ibid., 113.

---

## "உடன்படிக்கை உணவு" என்பது கர்த்தருடைய இராப்போஜனத்துடன் இணைவிக்கப்பட வேண்டியதாக உள்ளதா?

*தேவனுடனான உடன்படிக்கையை முத்திரையிடுதல் என்பது போன்று, இராப்போஜனத்துடன் உடன்படிக்கை உணவு ஒன்றைக் கொண்டிருப்பதற்குச் சிலர் பழைய ஏற்பாட்டைப் பின்னாகக் கண்ணோக்குகின்றனர். உணவு உண்ணுதல் என்பதினால் சில மனித உடன்படிக்கைகள் பின்பற்றப்பட்டன. அபிமெலேக்கும் ஈசாக்கும், தாங்கள் தங்கள் வேறுபாடுகளை ஒப்புரவாக்கி தங்கள் உடன்படிக்கையினால் நட்புறவு நிபந்தனைகளில் இருந்தனர் என்பதைக் காண்பிக்க ஒரு உணவைப் பகிர்ந்து கொண்டனர் (ஆதியாகமம் 26:26-31). யாக்கோபும் லாபானும் தாங்கள் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் அடையாளமாக கற்களின் குவியல் ஒன்றைக் குவித்தனர். இதைத் தொடர்ந்து, யாக்கோபு ஒரு பலி செலுத்தினார், மற்றும் லாபானும் யாக்கோபும் தங்கள் உறவினர்கள் இணைய ஒன்றாக உண்டனர் (ஆதியாகமம் 31:44-54).*

*மோசே, ஆரோன், நாதாப் மற்றும் அபியூ ஆகியோரை எழுபது மூப்பர்களுடன் தேவன் அழைத்து, "தூரத்திலிருந்து பணிந்துகொள்ளுங்கள்" என்று கூறினார் (யாத்திராகமம் 24:1); ஆனால் இது உடன்படிக்கையுடன் உறவுபட்டது என்று வேதாகமப் பதிவேடு எதுவும் சுட்டிக்காண்பிப்பது இல்லை. உடன்படிக்கை அர்ப்பணிக்கப்பட்ட பின்பு அவர்கள் மலைக்கு ஏறிச்சென்று கர்த்தருக்கு முன்பாகப் பானம்பண்ணினர் (யாத்திராகமம் 24:3-11). இதைத் தொடர்ந்து மோசேயும் யோசுவாவும் தனியே மலைக்கு ஏறிச்சென்று பத்துக்கட்டளைகள் என்ற உடன்படிக்கை எழுதப்பட்ட கற்பலகைகளைப் பெற்றுக்கொண்டனர் (யாத்திராகமம் 24:12-18; 34:27, 28).*

*இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் உண்பதற்குப் பதிலாக, மூப்பர்கள் மாத்திரம் உண்டனர், மற்றும் அதை அவர்கள் ஒரே ஒருமுறை மாத்திரம் செய்தனர். அந்த உணவு உடன்படிக்கையுடன் இணைவு கொண்டிருந்தது என்றால், இஸ்ரவேல் மக்கள் எல்லாரையும் அது உள்ளடக்கி இருந்ததால், அவர்கள் எல்லாரும் அதை உண்ணாதது ஏன்?*

*உடன்படிக்கை தரப்பட்டபோது, மோசே ஒரு உணவை உண்பதற்குப் பதிலாக, இருமுறை நாற்பது நாட்கள் பகலும் இரவும் உபவாசித்தார்*

*(யாத்திராகமம் 34:27, 28; உபாகமம் 9:9, 11, 18, 25). இது உபவாசம் புதிய உடன்படிக்கையுடன் இணைவு பெற்றுள்ளது என்று சுட்டிக்காண்பிக்கிறதா?*

*உணவு என்பது உடன்படிக்கை அர்ப்பணித்தலுடன் இணைவு கொண்டிருந்தாலும், இது இயேசு கர்த்தருடைய பந்தியின் ஒருபாகமாக உண்ணப்படுவதற்கு ஒரு உணவை ஏற்பாடு செய்தார் என்று நிரூபிக்காது. இது இவ்வாறு இருந்ததென்று எந்த வேதவசனமும் போதிப்பதில்லை. இயேசுவும் அப்போஸ்தலர்களும், அவர் இராப்போஜனத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர் பஸ்கா உணவை உண்டனர், ஆனால் அதன் பின்பு உணவு எதுவும் உண்ணப்படவில்லை, ஏனெனில் அதற்குச் சற்றுப் பின்பு அவர்கள் ஒலிவ மலைக்குப் புறப்பட்டுச் சென்றனர் (மத்தேயு 26:30; மாற்கு 14:26; லூக்கா 22:39). அடுத்தநாள் வரையிலும் இயேசுவின் இரத்தத்தைக் கொண்டு புதிய உடன்படிக்கையானது அர்ப்பணிக்கப் படாதிருந்தது.[1]*

*தொகுப்பாகக் கூறுவதென்றால், ஒரு சில மனித உடன்படிக்கைகளுடன் உணவுகள் இணைவு கொண்டிருந்தன என்ற உண்மை, கர்த்தருடைய இராப்போஜனத்துடன் ஒரு உணவு உண்ணப்பட வேண்டும் என்று நிரூபிப்பதில்லை. (1) எந்த உணவும் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கைகளின் பாகமாக இருந்துள்ளதாக முடிவாக நிரூபிக்க இயலாது. (2) முதல் உடன்படிக்கை தரப்பட்டபின்பு எல்லா மக்களும் அல்ல ஆனால் மூப்பர்கள் மாத்திரமே உண்டனர். (3) ஒரு உடன்படிக்கையுடன் இணைவுள்ள வகையில் எந்த உணவுகளும் தொடர்ந்து உண்ணப்படவில்லை. (4) பஸ்கா உணவு உடன்படிக்கையின் பாகமாகவோ அல்லது கர்த்தருடைய இராப்போஜனத்தின் பாகமாகவோ இருக்கவில்லை. (5) கர்த்தருடைய இராப்போஜனத்துடன் ஒரு உடன்படிக்கை உணவை உண்ணும்படிக்கு உதாரணமோ அல்லது அறிவுறுத்துதலோ கிறிஸ்தவர்களுக்குத் தரப்படவில்லை. (6) புதிய உடன்படிக்கையை அர்ப்பணிப்பதற்கு இயேசுவின் இரத்தம் (பலியாக) செலுத்தப்பட்டது - மற்றும் உணவு உண்ணப்படவில்லை. (7) தேவனுடைய பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகள் இரண்டுமே இரத்தத்தினால் அர்ப்பணிக்கப்பட்டன. ஆனால் அவைகள் சபைக்குழுமமாக உண்ணும் உணவுடன் இணைவு கொண்டிருக்கவில்லை (யாத்திராகமம் 24:7, 8; எபிரெயர் 9:15-17). (8) பவுலின் எழுத்துக்கள் மற்றும் தொடக்கால சபை வரலாறு ஆகியவை, கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்பாக உணவுகள் எதுவும் உண்ணப்படக் கூடாது என்று காண்பிக்கின்றன.*

---

*குறிப்பு*

*[1]தேவனுடைய உடன்படிக்கைகளில் சில, அடையாளங்களுடன் இணைக்கப்பட்டிருக்கையில், அவைகள் உணவுகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை (ஆதியாகமம் 9:11-17; 15:18; 17:2-21; லேவியராகமம் 2:13; எண்ணாகமம் 25:11-13; உபாகமம் 29:1; சங்கீதம் 89:3, 4).*